# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**முதலாந் தவணைப் பரீட்சை - 2023**

| தரம் - 10 | புவியியல் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

## பகுதி I

- இவ் வினாத்தாள் 30 வினாக்களைக் கொண்டுள்ளது.
- எல்லா வினாக்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு ஏற்ப இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- 1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை அடைப்புக்குள் உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

01. தஸ்மேனியா தீவு ........................................... கண்டமேடையில் அமைந்துள்ளது.
(ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, ஆசியா)

02. புவியின் மேற்பரப்பளவு ................................ மில்லியன் சதுரக்கிலோமீற்றர் ஆகும்.
(520, 510, 610)

03. மாறன் மண்டலத்தில் ஒவ்வொரு 1000m உயர அதிகரிப்புக்கும் வெப்பநிலையானது ..................... இனால் குறைவடைந்து செல்வது வெப்ப நழுவு வீதம் என அழைக்கப்படும்.
($0.64^0$C, $6.4^0$C, $0.064^0$C)

04. கவசத்தகடுகளில் சமுத்திரத்தகடாகக் காணப்படுகின்ற கவசத்தகடு ........................... ஆகும்.
(பசுபிக், யுரேசியா, வடஅமெரிக்கா)

05. புவியின் மொத்த நிலத்திணிவில் சுமார் 1% இனை உள்ளடக்கியது, ……..................
(புவியோடு, இடையோடு / மூடி, புவி உள்ளீடு/கோளவகம்/மையம்)

06. புவியின் உள்ளமைப்பில் மையத்தையும் மூடியையும் பிரிக்கின்ற இடைவெளி ....................... ஆகும்.
(லேமான், கொன்றாட், கூட்டன்பேக்)

07. தாவரங்களின் ஒளித்தொகுப்புச் செயன்முறைக்குப் பங்களிப்புச் செய்கின்ற வாயு ...................... ஆகும்.
(ஒட்சிசன், காபனீரொட்சைட், நைதரசன்)

08. தெளிவான பருவ வேறுபாடுகளை ................................. காலநிலையில் அவதானிக்கலாம்.
(அயன, இடைவெப்ப, முனைவு)

09. மாறன் மண்டலத்தின் மேல் எல்லையை அண்மித்ததாக .................................... பறக்கின்றன.
(சுப்பர்சொனிக்ஜெட், சாதாரண ஆகாய விமானங்கள், செய்மதிகள்)

10. .......................... மடிப்பு மலைத்தொடரானது யூரேசியத்தகடும் இந்திய - அவுஸ்திரேலியத் தகடும் ஒருங்குவதால் உருவாகியுள்ளது.
(யூரல், இமயமலை, பெரிய பிரிப்புத்தொடர்)

❖ ***11 தொடக்கம் 15 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து சரியாயின் " ச " ஐயும் பிழையாயின் " பி " ஐயும் சுற்றி வட்டம் வரைக.***

11. உலகின் மிக ஆழமான அகழியான மரியானா பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளது. ச / பி

12. 23 ½$^{0}$ தென்னகலக்கோடு கடகக் கோடு என அழைக்கப்படுகின்றது. ச / பி

13. கருங்கடலானது மத்தியதரைக் கடலுடன் தொடுக்கப்பட்டுள்ளது. ச / பி

14. உயிர்க்கோளத்தின் சமநிலை தகர்வுறுவதில் மனித செயற்பாடுகள் கூடுதலாக செல்வாக்கு செலுத்துகின்றன. ச / பி

15. ஐரோப்பாக் கண்டத்தையும் ஆசியாக் கண்டத்தையும் இணைத்த நிலத்திணிவுக்கு வழங்கப்படுகின்ற பெயர் யுரேசியா ஆகும். ச / பி

❖ ***16 தொடக்கம் 25 வகையான வினாக்களுக்கு பொருத்தமான விடையினை இடைவெளியில் எழுதுக.***

16. கஸ்பியன் கடலும் .............................. கடலும் முழுமையாக நிலத்தாற் சூழப்பட்டவையாகும்.

17. புவியுட்பாகத்தின் மிகப்பெரிய திணிவாக ........................... படை அமைந்துள்ளது.

18. மிகக் குறைந்த வெப்ப நிலையைக் கொண்ட வளிப்படை ............................ ஆகும்.

19. 1 : 50000 படமானது ................................ என அழைக்கப்படுகின்றது.

20. உலகில் மிக உயர்ந்த இடத்தில் .......................................... ஏரி அமைந்துள்ளது.

21. உலகில் முதன் முதலில் காலநிலை பாகுபாட்டினை வெளியிட்டவர்................................ ஆவார்.

22. கண்ட மேடையின் விளிம்பிலிருந்து சமுத்திரத்தை நோக்கி சாய்வாக அமைந்துள்ள நிலப்பகுதி ................................... என அழைக்கப்படுகின்றது.

23. உலகின் மிகப்பெரிய தீவு ....................................... ஆகும்.

24. உலகின் மிக உயர்ந்த இடத்தில் உள்ள மேட்டுநிலமாக ...........................மேட்டுநிலம் விளங்குகின்றது.

25. ............................... படையானது புறவூதாக் கதிர்களும் அகச்சிவப்புக் கதிர்களும் புவியை வந்தடையாது பாதுகாக்கின்றது.

❖ ***26 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.***

26. சிலிக்காவையும் அலுமினியத்தையும் அதிகளவு கொண்ட புவியோட்டுப்படை.
1) கண்டவோடு 2) சமுத்திரத்வோடு 3) இடையோடு 4) கோளவகம்

27. 1 : 50000 படத்தின் அடிப்படையில் இலங்கை எத்தனை அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
1) 90 2) 93 3) 92 4) 94

28. மிகச்சிறிய சமுத்திரம்
1) ஆட்டிக் சமுத்திரம் 2) அந்தாட்டிக் சமுத்திரம்
3) இந்து சமுத்திரம் 4) அத்திலாந்திக் சமுத்திரம்

❖ **29 – 30 வரையான வினாக்களில் “அ” “ஆ” எனத் தரப்பட்டுள்ள நிரல்களில் “அ” நிரலுக்கேற்ப “ஆ” நிரலைப் பொருத்தினால் வரும் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

29. நிரல் அ — நிரல் ஆ

1) $23\frac{1}{2}^0$ வடஅகலாங்கு — A – ஆட்டிக்வட்டம்

2) $66\frac{1}{2}^0$ தென்னகலாங்கு — B – கடகக்கோடு

3) $23\frac{1}{2}^0$ தென்னகலாங்கு — C – அந்தாட்டிக்வட்டம்

4) $66\frac{1}{2}^0$ வடஅகலாங்கு — D – மகரக்கோடு

1) DCBA 2) BACD 3) BCDA 4) CBDA (……..)

30. நிரல் அ — நிரல் ஆ

1) டிறக்கன்ஸ்பேக் மலைத்தொடர் — A – அவுஸ்திரேலியா

2) அல்ராய் மலைத்தொடர் — B – ஐரோப்பா

3) பெரிய பிரிப்பு மலைத்தொடர் — C – ஆசியா

4) அப்பினைன் மலைத்தொடர் — D – ஆபிரிக்கா

1) DCBA 2) DCAB 3) DACB 4) DBCA (……..)

(30 x 1 = 30 புள்ளிகள்)

## பகுதி II

1ஆம், 2ஆம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

(01) 1) பின்வரும் இடங்களை இலங்கைப்படத்திற் குறித்துப் பெயரிடுக.

1. நெடுந்தீவு
2. ஹிக்கடுவை
3. மகாவலிகங்கை
4. சிங்கராஜவனம்
5. குமண

(5 x 1 = 5 புள்ளிகள்)

2) பின்வருவனவற்றை உலகப் படத்தில் குறித்து பெயரிடுக

1. றொக்கி மலைத்தொடர்
2. அமேசன் காடுகள்
3. பாக்குநீரிணை
4. இலங்கைத்தீவு
5. றியோ டி ஜெனீரோ

(5 x 1 = 5 புள்ளிகள்)

(02) 1. படங்களின் இரு பிரதான வகைகளும் எவை?
2. படமாக்கலுக்குப் பயன்படுத்தப்படும் மூன்று நுட்பங்களையும் குறிப்பிடுக.
3. 1 : 50000 படத்தின் நேர்கோட்டளவுத்திட்டத்தினை வரைந்து காட்டுக.
4. பின்வரும் புவியியல் அம்சங்களுக்கான வழக்கக்குறியீடுகளை வரைந்து காட்டுக.
1) மாகாண எல்லை
2) நெல்
3) பாடசாலை
4) வைத்தியசாலை
5) விகாரை
6) நீர்ப்பாசனக்கால்வாய்

(2 + 3 + 4 + 6 = 15 புள்ளிகள்)

(03) 1. புவியின் நீர்க்கோளத்தில் நீர் பரம்பியுள்ள வேறுபட்ட வடிவங்களைக் பெயரிடுக.
2. வெப்பநிலை அடிப்படையாகக் கொண்ட வளிமண்டல கட்டமைப்பை வரைந்து காட்டுக.
3. கற்கோளத்தைப் பயன்படுத்தும் போது ஏற்படுகின்ற பாதிப்புகள் நான்கு தருக.
4. மனிதனுக்கு வளிக்கோளத்தால் கிடைக்கும் பயன்பாடுகள் ஐந்து தருக

(2 + 3 + 4 + 6 = 15 புள்ளிகள்)

(04) 1. புவித்தொகுதியின் இரண்டு உபதொகுதிகளைக் குறிப்பிடுக.
2. உயிர்க்கோளத்தினுடைய எல்லைகளை தருக.
3. உயிர்க்கோளத்தைப் பாதிப்படையச் செய்யும் மனித நடவடிக்கைகள் நான்கு தருக.
4. இன்று பல்வேறுபட்ட மனித நடவடிக்கைகள் காரணமாக நீரின் தரம் சீரழிந்து வருகின்றது. அதற்கான இரண்டு காரணங்களைத் தருக. அவற்றைச் சுருக்கமாக விபரிக்குக.

(2 + 3 + 4 + 6 = 15 புள்ளிகள்)

(05) 1. கண்டம் என்றால் என்ன?
2. பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள இரண்டு சமுத்திர அகழிகளைப் பெயரிடுக.
3. மலைப்பிரதேசத்துடன் தொடர்புபட்ட மானிட நடவடிக்கைகள் மூன்றினைப் பெயரிடுக.
4. சமுத்திரங்கள் கடல்களை வளமொன்றாக மனிதன் பயன்படுத்தும் போது ஏற்படக்கூடிய எவையேனும் இரண்டு நிகழ்வுகளை விளக்குக.

(2 + 3 + 4 + 6 = 15 புள்ளிகள்)

(06) 1. புவியின் உள்ளமைப்பின் பிரதான மூன்று படைகளையும் படம் வரைந்து குறிக்குக.
2. சீயல், சீமாப்படை என்றால் என்ன?
3. புவியோட்டின் பண்புகள் நான்கு தருக.
4. புவியின் பிரதான கவசத்தகடுகளைப் பெயரிடுக.

(2 + 3 + 4 + 6 = 15 புள்ளிகள்)